**Source:** *Tamil Murasu*, p1
**Date:** 5 February 2025

# ஆய்வு: இன, சமய விவகாரங்களில் அரசாங்கம் ஈடுபட கூடுதலானோர் விருப்பம்

**கி. ஜனார்த்தனன்**

இனம், சமயம் சார்ந்த விவகாரங்களை நிர்வகிப்பதில் அரசாங்கம் மேலும் ஈடுபடுவதற்குத் தேவை இருப்பதாக ஆறு ஆண்டுகளுக்கு முன்பைவிட கூடுதலான சிங்கப்பூர்வாசிகள் கருதுகின்றனர்.

இதற்கு நேர்மாறாக புலம்பெயர்வு, சமுதாய-பொருளியல் தகுதிநிலை ஏற்றத்தாழ்வு, தன்பாலின ஈர்ப்பு ஆகிய விவகாரங்களில் அதிக அரசாங்க ஈடுபாடு தேவை என்று பிப்ரவரி 4ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட கொள்கை ஆய்வுக் கழகத்தின் 2024 கருத்தாய்வு குறிப்பிடுகிறது.

இன விவகாரங்களில் அரசாங்கம் தனது ஈடுபாட்டை அதிகரிக்கவேண்டும் என்று 30.5 விழுக்காட்டினர் கூறினர். 2018ல் இந்த விழுக்காடு 27.3ஆக இருந்தது.

சமய விவகாரங்களைப் பொறுத்தவரை, அரசாங்க ஈடுபாடு அதிகமாக தேவைப்படுவதாக 28.4 விழுக்காட்டினர் கருதுகின்றனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை நடத்தப்பட்ட கொள்கை ஆய்வுக் கழகத்தின் கருத்தாய்வு, 2024ஆம் ஆண்டில் சிங்கப்பூர்ச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் 4,000 சிங்கப்பூர் குடிமக்களிடம் மேற்கொள்ளப்பட்டது.

இனம், சமயம், குடிநுழைவு, சமூக-பொருளியல் தகுதிநிலை, தன்பாலின ஈர்ப்பு ஆகிய ஐந்து விவகாரங்கள் குறித்த பொதுமக்களின் உணர்வை இந்தக் கருத்தாய்வு விவரிக்கிறது.

இன விவகாரங்களின் நிர்வாகத்தில் அரசாங்கம் ஈடுபடும் அளவு போதுமானது என்று 2024ல் 63.3 விழுக்காட்டினரும் 2018ல் 65.7 விழுக்காட்டினரும் கூறியிருந்தனர்.

இந்த ஈடுபாட்டினை அரசாங்கம் குறைக்கவேண்டும் என்று 2024ல் 6.2 விழுக்காட்டினரும் 2018ல் 7 விழுக்காட்டினரும் விரும்புவதாகப் பதிவாகியிருந்தது. இதுபோலவே சமய விவகாரங்களைப் பொறுத்தவரையில், 2024ல் 64.8 விழுக்காட்டினரும் 2018ல் 67.8 விழுக்காட்டினரும் அரசாங்கம் தற்போது எந்த அளவுக்கு ஈடுபாடு காட்டுகிறதோ அதே அளவில் தொடர வேண்டுமென விரும்புகின்றனர்.

இன விவகாரங்களில் அரசாங்கம் காட்டும் ஈடுபாடு தற்போதிருக்கும் அதே அளவில் இருக்கவேண்டும் என்று கருத்தாய்வில் சீன இனத்தவர் 66.8 விழுக்காட்டினரும், மலாய்க்காரர்கள் 51.4 விழுக்காட்டினரும், இந்தியர்கள் 51.2 விழுக்காட்டினரும், பிற இனத்தவர்கள் 52.9 விழுக்காட்டினரும் கூறியுள்ளனர்.

2024ல் கருத்தாய்வில் பதிவான ஐந்து விவகாரங்களில் இன, சமய விவகாரங்கள் முறையாக நிர்வகிக்கப்படாமல் இருந்தால், குறிப்பிட்ட சில சமூகங்கள் மீது சினமும் வன்முறையும் ஏற்படக்கூடும் என்று நினைப்போரின் விகிதம் ஆக அதிகம்.

சமூக-பொருளியல் தகுதிநிலை ஏற்றத்தாழ்வு, புலம்பெயர்வு, தன்பாலின ஈர்ப்பு ஆகிய விவகாரங்களின் நிர்வாகம் குறித்து பெரும்பாலானோர், அரசாங்கம் தற்போது காட்டும் ஈடுபாட்டின் அளவு மனநிறைவுடன் இருப்பதாகப் பதிவாகியுள்ளது.

சமூக-பொருளியல் தகுதிநிலை ஏற்றத்தாழ்வுகளைப் பொறுத்தவரை, அரசாங்கம் போதிய அளவு ஈடுபாடு காட்டுவதாக 2024ல் 56.4 விழுக்காட்டினரும் 2018ல் 48.7 விழுக்காட்டினரும் தெரிவித்தனர்.

ஒட்டுமொத்தமாக சிங்கப்பூரில் இன, சமய விவகாரங்கள் நிறைவு அளிக்கும் வகையில் கையாளப்பட்டு வருவதாக ஆய்வில் கலந்துகொண்டோரில் முக்கால் பங்கிற்கும் அதிகமானோர் கூறியுள்ளனர்.

இனம் அடிப்படையிலான கொள்கை குறித்த 2024 கருத்தாய்வின்படி, சீனர், மலாய்க்காரர், இந்தியர், மற்றவர்கள் என அரசாங்கம் மக்களை வகுக்கும் முறை அகற்றப்படவேண்டும் என்று 5.9% விரும்புகின்றனர்.

ஆயினும், அந்த முறை அப்படியே தொடரவேண்டும் என்று 44.9% கூறியதாக அறிக்கை குறிப்பிடுகிறது.

24.8% கூடுதல் இனப்பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் 1.6% இனப்பிரிவுகள் குறைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

janark@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.